1972 மார்ச் 8]

மேட்டூர் உயர்மட்டக் கால்வாய்

369 வினா*—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூர் உயர்மட்டக் கால்வாயில் பாசன விஸ்தீரணத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

சுங்க வசூல்

370 வினா*—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நம் மாநிலத்தில் தற்போது எத்தனை பாலங்களில் டோல் வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போது நான்கு பாலங்களில் சுங்கம் வசூலிக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : நமது தமிழகத்தில் நிதிப் பற்றுக் குறை காரணமாகப் பல இடங்களில் கட்டப்பட வேண்டிய பெரிய பாலங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன. ஆகவே, எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமிருந்தோ அல்லது மத்திய அரசிடமோ கடனைத் தொகைகளைப் பெற்று பாலங்களைக் கட்டி முடித்துவிட்டு அந்தக் கடன் அடைபடுகிற வகையில் டோல் வசூலிக்கும் நியதியை மேற்கொள்ள ஆவன செய்ய அரசு முன்வருமா ? கொள்ளிடம் பாலம் கட்டி பல ஆண்டுகள் ஆகியும் அங்கு இன்னும் சுங்கம் வசூலிப்பது ஏன் என்பது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது கட்டப்பட்டு வருகின்ற பாலங்களுக்கு சுங்கம் வசூலிப்பதில்லை. ஏற்கனவே கட்டப்பட்ட பாலங்களுக்குத்தான் சுங்கம் வசூலிக்கப் படுகிறது. கொள்ளிடம் பாலத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தைப் பற்றிப் பரிசீலித்த பிறகுதான் முடிவு கூறமுடியும். தற்போது வசூலிக்கப்படுகின்ற அந்தப் பணத்தைப் பஞ்சாயத்து பெறுகிற காரணத்தால், இதன் காரண மாகப் பஞ்சாயத்துக்கு வருமானம் வரக்கூடிய நிலைமை இருப்ப தால் இதைப் பற்றிப் பரிசீலித்த பிறகுதான் அரசு முடிவுக்கு வரும்.